வசதி இருக்கின்ற சில கிராமங்களில்கூட இன்னும் மின்வசதி செய்து தரப்படாத நிலைமை இருக்கிறது, அங்கு மலைவாழ் மக்கள் மின்சாரம் இல்லாத காரணத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறார்கள், அதற்கான விரிவான நடவடிக்கை எடுத்து, வருகின்ற ஓராண்டுக் காலத்திற்குள்ளாவது அங்குள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சார வசதி கிடைக்குமாறு ஏற்பாடு செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினருடைய கருத்தான ராசிபுரம் பகுதியிலே ஏறத்தாழ 61 கிராமங்களுக்கு அந்த கொல்லிமலைப் பகுதியிலே மின் இணைப்பு வழங்க வேண்டுமென்ற ஒரு இலக்கை நாங்கள் நிர்ணயித்திருக்கிறோம், நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, சாலை பகுதி மட்டு மல்லாமல். வன இலாகாவினுடைய அனுமதியையும் நாங்கள் பெறவேண்டியிருக்கிறது, அதாவது மின் பாதையை அமைப் பதற்கு வன இலாகாவினுடைய அனுமதி வேண்டியிருக்கிறது, அதற்கான அனுமதியை கோரியிருக்கிறோம், வன இலாகா வினுடைய அனுமதி கிடைத்த உடனேயே ராசிபுரம் பகுதியி லுள்ள 61 கிராமங்களுக்கும் மின் இணைப்பு வசதி செய்து தரப்படும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 310. திரு, வெ. பழனிசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

310—

திருப்பூர் இரயில்வே மேம்பாலம்,

*9320 திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பூர் இரயில்வே மேம்பாலம் (குன்றத்தூர்-திருப் பூர் பாலம்) கட்டும் பணிகள் எந்த நிலையில் உள்ளன?

(ஆ) பணிகள் எப்போது துவங்க உள்ளன?

(இ) பாலத்திற்கான மொத்த மதிப்பீட்டுத்தொகை எவ்வளவு?

(ஈ) இரயில்வே பகுதியில் பணிகள் துவங்க அரசால் எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது?

1992 மார்ச் 23]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) முதல் (ஈ): உலக வங்கித் திட்டத்தின் கீழ் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கேட்டிருக்கின்ற அந்த மேம்பாலம் மற்றும் இணைப்புச் சாலைக்காக ஏறத்தாழ 5 கோடியே 61 லட்சம் ரூபாய்க்கு இன்றைக்கு தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது, தகுந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 'Pre—Qualification Tenders' என்று சொல்லப் படுகின்ற தகுதி பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து போடப் படுகின்ற டெண்டர் 27–3–1992 என்று நிர்ணயிக்கப்பட்டு அந்த டெண்டர் கோரப்பட்டிருக்கிறது, பாலத்திற்கான மொத்த மதிப்பீடு தொகை 124 லட்சம் ரூபாய், மொத்த மதிப்பீட்டில் ரெயில்வே இலாகாவுக்காக 50 சதவிகிதம் வேறு கட்டியிருக்கிறோம். ஆகவே. 1992–93 ஆம் ஆண்டில் இந்தப் பணியை உடனடியாகத் தொடங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்,

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கடந்த 15 ஆண்டுக் காலமாக திருப்பூர் நகரத்திலே இருந்து வந்த கோரிக்கையான திருப்பூர்-குன்றத்தூர் என்று சொல்லப்படுகின்ற மேம்பாலத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே கட்டுகிற வாய்ப்பை உருவாக்கித் தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் திருப்பூர் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, ரெயில்வே பகுதியில் கட்டுகிற பணிக்கு டெண்டர் போடப்பட்டு. ரெயில்வே பகுதியினுடைய பணிகள் எப்போது துவங்கப்பட உள்ளது என்பதையும் அதைப்போல நமது பகுதியில் உள்ள பணிகள் எப்போது துவங்கும் என்பதை யும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கனவே நான் தெரிவித் திருக்கிறேன், 'Pre—qualification Tender' என்று சொல்லப்படுகிற அந்த நிலை 27 ஆம் தேதியன்று நாங்கள் ஒப்பந்தப்புள்ளி கோர இருக்கிறோம், அதிலே தகுதிபடைத்த ஒப்பந்தக்காரர்கள் கிடைத்த உடனேயே அந்த டெண்டர் விடப்பட்டு இந்த ஆண்டே அந்தப் பணிகள் உடனடியாக தொடங்கப்பட இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது, அதைப்போல ரெயில்வே துறைக்கு வேண்டிய பணத்தையும் நாங்கள் கட்டியிருக்கிறோம், அவர்களிடத்திலேயும் உடனடி யாக பணியைத் தொடங்க வேண்டுமென்று நாங்கள் கேட்

டிருக்கிறோம், ஆகவே. இந்த ஆண்டு, வெகு விரைவிலே திட்டத்திற்கான பணம் வந்துவிட்ட காரணத்தினாலே நடவடிக்கை எடுத்து, எந்த செயலையுமே முனைப்பாக செயல் படுத்துகின்ற நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இதையும் உடனடியாக செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

முற்பகல் 10-10

திரு, வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ரெயில்வே பகுதியில் பணிகளை ரெயில்வே இலாக்காதான் செய்ய வேண்டுமென்ற அடிப்படை நோக்கத்தோடு, நாம் கொடுக்கும் நிதியைக் கொண்டு ரெயில்வே இலாக்கா பணிகளைச் செய்ய வேண்டும். ஆனால் ரெயில்வே இலாக்காவினால் பணிகள் தாமதப்படுத்தப்பட்டு வருகின்ற காரணத்தால். நம்முடைய பணிகளும் தாமதப்படுத்தப்பட்டு. எஸ்டிமேட் தொகை அதிகமாகும் வாய்ப்பு பல நேரங்களில் உருவாகியிருக்கிறது, ஆகவே ரெயில்வே இலாக்கா செய்யும் பணிகளை மிக வேகமாகச் செய்வதற்கு உண்டான முறையில் முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பெரிய வேலைகளுக்கு ஒப்பந்தம் விடுகின்ற நேரத்திலே. நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பின்னாலே காலக்கெடுவை நாம் நிர்ணயித்திருக்கிறோம், எந்த வேலை எடுத்தாலும் உடனடியாக காலக் கெடு நிர்ணயித்து, அந்த வேலைகளை உடனடியாக முடிக்க வேண்டுமென்று உத்தர விடப்பட்டிருக்கிறது, இந்த வேலையைப் பொறுத்தமட்டிலே 24 மாதங்கள். அதாவது 2 ஆண்டுகளுக்குள் திருப்பூர் மேம்பாலத்தைக் கட்ட வேண்டுமென்று இலக்கு நிர்ணயித்து இருக்கிறோம், 24 மாதத்திற்குள் நம்முடைய அரசு அந்த வேலையை முடிக்கும் நேரத்தில். ரெயில்வே துறையும் பால வேலைகளை முடித்தாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம், ஆகவே ரெயில்வே துறை பணிகளும், நம்முடைய நெடுஞ்சாலைத் துறையினுடைய பணிகளும் ஒரே நேரத்தில் சீராக எடுக்கப்பட்டு, 24 மாத காலத்திற்குள் முடிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 311 திரு, சி, ஞானசேகரன். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.